# HOW TO APPLY THROUGH ONLINE

## இணைய வழியே விண்ணப்பிப்பது எப்படி.

## Instructions to Candidates

1. Candidates should apply only through online in the District Recruitment Bureau's website www.pdkdrb.in

2. விண்ணப்பதாரர்கள் www.pdkdrb.in என்ற இணையதளம் மூலம் இணையவழி மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

3. All candidates have to furnish their correct SSLC /HSC/Degree Register Number, Month and Year of passing and Name of the Board/University, which issued the Certificate. Any details found to be wrong, the online Application is liable for rejection at any stage.

   விண்ணப்பதாரர்கள் இணைய வழியாக உள் நுழையும் போது கேட்கப்படும் SSLC/HSC/பட்டப்படிப்பு பதிவு எண், தேர்ச்சி பெற்ற வருடம் மற்றும் மாதம், சான்றிதழ் வழங்கிய குழுமம் /பல்கலைக்கழகம் ஆகிய தகவல்களை சரியாக பதிவு செய்ய வேண்டும். மேற்படி விபரங்கள் தவறாக இருப்பின் தேர்வுக்கான விண்ணப்பம் எந்தவொரு நிலையிலும் நிராகரிக்கப்பட வாய்ப்புள்ளது.

4. Candidate who have more than one SSLC marks sheet, should enter the details available in the marks sheet issued after final attempt in which he had passed the SSLC examination.

   ஒன்றுக்கு மேற்பட்ட SSLC சான்றிதழ்கள் வைத்திருப்பவர்கள், தாங்கள் இறுதியாக தேர்வெழுதி தேர்ச்சி பெற்ற சான்றிதழில் உள்ள விபரங்களை பதிவு செய்ய வேண்டும்.

5. A valid e-mail ID and Mobile Number is Mandatory for apply through online. E-mail ID and Mobile Number should always be kept in active. DRB will send all communications and messages through the registered e-mail ID and Mobile Number.

   இணைய வழியில் விண்ணப்பிப்பதற்கு, பயன்பாட்டில் உள்ள மின்னஞ்சல் முகவரி மற்றும் கைப்பேசி எண் ஆகியவை கட்டாயம் ஆகும். மின்னஞ்சல் முகவரி மற்றும் கைபேசி எண் ஆகியவற்றை தொடர்ந்து பயன்பாட்டிலேயே வைத்திருக்க வேண்டும். தேர்வு தொடர்பான செய்திகள் அனைத்தும் விண்ணப்பதாரர் பதிவு செய்துள்ள மின்னஞ்சல் முகவரி மற்றும் கைபேசி எண் ஆகிவற்றில் மட்டுமே அனுப்பப்படும்.

5. The details furnished by the candidate in the recruitment specific application will alone be taken into account.

   விண்ணப்பதாரர்கள் தங்களது விவரங்களை அவர்கள் குறிப்பிட்ட தேர்விற்கு விண்ணப்பிக்கும் போது அந்த விண்ணப்பத்தில் பதிவு செய்யும் விவரங்கள் மட்டுமே அந்த தேர்வுக்காக அவர்கள் தரும் விவரங்களாக எடுத்துக் கொள்ளப்படும்.

6. Please note that all the particulars mentioned in the online application including Name of the Candidate, Post applied for, Communal Category, Date of birth, Address, E-mail ID, etc., will be considered as final. Candidates are hence requested to fill in the online application form with utmost care as no correspondent regarding change of details will be entertained.

   ஒரு குறிப்பிட்ட பதவிக்கான விண்ணப்பத்தில் விண்ணப்பதாரர்கள் தரும் பெயர், விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், சாதிப் பிரிவு, பிறந்த தேதி, முகவரி, மின்னஞ்சல் முகவரி,etc., போன்ற விபரங்கள் இறுதியானவை என கருதப்படும். எனவே, விண்ணப்பதாரர்கள் தங்களது விபரங்களை உள்ளீடு செய்யும் போது மிகுந்த கவனத்துடன் பதிவு செய்யுமாறுகேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இணைய வழி விண்ணப்பத்தில் மாற்றம் செய்யக்கோரி பெறப்படும் எந்தவொரு கோரிக்கையும் பரிசீலிக்கப்படமாட்டாது.

7. Before submitting details in the application, they can choose any one of the following mode of payment.

   a) ‘SBI Collect’ (Net Banking/Debit Card/Credit Card)

   b) District Central Cooperative Bank Challan.

   விண்ணப்பத்தில் உரிய விவரங்களை பதிவு செய்வதற்கு முன்பு விண்ணப்பதாரர்கள் தங்களது தேர்வுக் கட்டணங்களை செலுத்த கீழ்காணும் ஏதேனும் ஒரு முறையினை தேர்வு செய்யலாம்.

   அ) ‘SBI Collect’ (Net Banking/Debit Card/Credit Card)
   ஆ) மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி செலுத்துச் சீட்டு.

8. Payment mode through ‘SBI Collect’ (Net Banking/Debit Card/Credit Card) would take one working day for fee reconcilation. Payment made through Challan would take atleast two working days for reconcilation.

   விண்ணப்பதாரர்கள் தங்களது தேர்வுக் கட்டணத்தை இணையவழி வங்கி சேவை அல்லது பற்று அட்டை/ கடன் அட்டை மூலமாக செலுத்தும் போது விண்ணப்பக் கட்டணத்தை

ஒத்திசைவு செய்ய ஒரு வேலை நாள் ஆகும். விண்ணப்பதாரர்கள் தங்களது தேர்வுக் கட்டணத்தை செலுத்து சீட்டு மூலம் செலுத்தும்போது, விண்ணப்பக் கட்டணங்கள் ஒத்திசைவு பெற குறைந்தப்பட்சம் இரண்டு வேலை நாட்கள் ஆகும்.

9. In case, candidate choose to pay fees through the online payment gateway (SBI Collect), an additional page will be displayed wherein candidates may follow the instructions and fill in the requisite details to make payment.

   விண்ணப்பதாரர்கள் ஒருவேளை இணையவழி (SBI Collect) கட்டணம் செலுத்தும் முறையை தெரிவு செய்தால் கூடுதல் பக்கம் திரையில் தெரிய வரும். அந்த இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளை கவனமாக பின்பற்றி தேவையான விவரங்களைப் பதிவு செய்து கட்டணம் செலுத்த வேண்டும்.

10. After submitting your payment information in the online payment form, please wait for the intimation from the server, DO NOT press back or refresh button in order to avoid payment failure or double charge.

    விண்ணப்பக் கட்டணம் விவரங்களை பதிவு செய்த பின்னர் பணப்பரிமாற்றம் தடையையோ அல்லது இரண்டாம் முறையாகபணம் செலுத்தும் சூழ்நிலையைத் தவிர்க்கஅதற்கான விவரம் திரையில்வரும் வரை back or refresh ஆகியவற்றை கொடுக்காமல் காத்திருக்கவும்.

11. If the online transaction has been successfully completed, D**U Number** will be generated. Candidates should note this number for further reference. This number should be filled in appropriate place in online application.

    இணைய வழி கட்டணம் செலுத்தும் முறை நிறைவு செய்யப்பட்டவுடன், **DUஎண்** திரையில் தோன்றும். அதனை விண்ணப்பதாரர்கள் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். இந்த எண்ணினை இணையவழி விண்ணப்பத்தில் கேட்கப்பட்டுள்ள கலத்தில் பூர்த்தி செய்ய வேண்டும்.

12. For offline mode of Payment, candidates have to select the Pudukkottai District Central Cooperative Bank.

    இணைய வழியில்லா கட்டணம் செலுத்தும் முறையை தேர்ந்தெடுக்கும் விண்ணப்பதாரர்கள் புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை தேர்வு செய்ய வேண்டும்.

13. District Recruitment Bureau reserves the right to change the mode of payment at any time without any intimation.

கட்டணம் செலுத்தும் முறையை மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம் எந்த நேரத்திலும் மாற்றும் உரிமை உண்டு.

14. Kindly collect the candidate’s copy of the Fee Payment Challan from the Pudukkottai District Central Cooperative Bank/ Branch. Please check that the Challan is properly signed and the details of Transaction Number, Branch Name and Journal ID, Deposit datehave been noted in the Challan by the Branch Authorities. This Challan must bescanned and uploaded in online application.

புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி / கிளையில் கட்டணத்தை செலுத்திய பின்னர் விண்ணப்பதாரருக்குண்டான செலுத்துச் சீட்டின் நகலினை பெற்றுக் கொள்ள வேண்டும். செலுத்துச் சீட்டில் பணம் பெறுபவரின் சரியான கையொப்பம், பணம் பரிமாற்ற எண், கிளையின் பெயர், வங்கிக்கான குறியீட்டு எண், பணம் செலுத்திய தேதி போன்ற விபரங்களை சரியாக உள்ளதா என சரிபார்த்துக் கொள்ளவும். மேலும், மேற்படி செலுத்து சீட்டினை ஸ்கேன் செய்து இணையவழி விண்ணப்பத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

15. Candidates need not send the print out of the online application or any other supporting documents to the DRB. The certificates will be verified only when the candidates come up for next stage of selection.

விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப நகலினையோ அல்லது சான்றிதழ்களையோ மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு அனுப்பத் தேவையில்லை. விண்ணப்பதாரர்கள் அடுத்த கட்ட தெரிவுக்கு தேர்வானால் மட்டுமே அவர்களின் சான்றிதழ்கள் சரிபார்க்கப்படும்.

**Note :-**

**குறிப்பு :–**

i) Candidates are advised in their own interest to apply on-line which before the closing date and not to wait till the last date for depositing the fee to avoid the possible of disconnection/ inability/ failure to log on to the DRB, Pudukkottai website on account of heavy load on internet / website.

விண்ணப்பதாரர்கள் தேர்வுக்கு விண்ணப்பிக்க குறிப்பிடப்பட்டுள்ள கடைசி நாள் வரை காத்திருக்காமல் அதற்கு முன்னரே போதிய கால அவகாசத்தில் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏனெனில் கடைசி நாளில் அதிகப்படியான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும்போது விண்ணப்பம் சமர்ப்பிப்பதில் தாமதமோ அல்லது தொழில் நுட்ப பிரச்சனைகளோ எழ வாய்ப்புள்ளது.

ii) DRB, Pudukkottai does not assume any responsibility for the candidates not being able to submit their applications within the last date on account of the aforesaid reasons or any other reason beyond the control of DRB, Pudukkottai.

மேற்கூறிய காரணங்களினால் விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை கடைசி கட்ட நாட்களில் சமர்ப்பிக்க இயலாது போனால் அதற்கு புதுக்கோட்டை மாவட்ட ஆள் சேர்ப்புநிலையம் பொறுப்பாகாது.

iii) Under no circumstances, a candidate should share/ mention e-mail ID and password or mobile number of any other person. In case a candidate does not have a valid personal e-mail ID, they should create a new e-mail ID before applying on-line and must maintain that e-mail account.

விண்ணப்பதாரர்கள் தங்களது மின்னஞ்சல் முகவரி, கடவுச் சொல் அல்லது கைபேசி எண் ஆகியவற்றை மற்றவர்களுடன் எந்த ஒரு சூழ்நிலையிலும் பகிர்ந்து கொள்ளக் கூடாது. விண்ணப்பதாரர்கள் அவர்களுக்கென மின்னஞ்சல் முகவரி ஏதுமில்லை எனில் அவர்கள் புதிதாக ஒரு மின்னஞ்சல் முகவரியை விண்ணப்பிக்கும் முன்னர் உருவாக்கிக் கொள்ளவும். அதனைத் தொடர்ந்து பயன்பாட்டில் வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

iv) Candidates should take almost care while filling in the online application. Candidates are requested to fill in the online application form with utmost care as no correspondence regarding change of details will be entertained.

விண்ணப்பதாரர்கள் தாங்கள் விண்ணப்பிக்கும் போது மிகுந்த கவனத்துடன் விவரங்களைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பத்தில் தவறாக கொடுக்கப்பட்ட விவரங்களை மாற்றிக் கொள்ள வேண்டி விண்ணப்பதாரர் களிடமிருந்து பெறப்படும் எந்தவொரு வேண்டுகோளும் பரிசீலிக்கப்படமாட்டாது.

v) Candidates should carefully fill in the details in the Online Application at the appropriate places and click on the 'SUBMIT' button at the end of the on-line application format. Before pressing the 'SUBMIT' button, candidates are advised to verify every particulars filled in the application. The name of the candidate or name of his / her father etc., should be spelt correctly in the application as it appears in the certificates/ mark sheets. Any change/ alteration found may lead to disqualification of the candidates.

விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ள விவரங்களை மிகுந்த கவனத்துடன் உள்ளீடு செய்து விண்ணப்பத்தினை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சமர்ப்பிக்கும் முன்னர் தாங்கள் அளித்த விவரங்கள்

அனைத்தும் சரியாக உள்ளனவா என சரிபார்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பதாரர்களின் பெயர், அவர்களது பெற்றோரின் பெயர் ஆகியவற்றை சான்றிதழ்களில் உள்ளபடி மிகச் சரியாக பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேற்படி விவரங்களில் மாற்றங்கள் ஏதுமிருப்பின் அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்பட வாய்ப்புள்ளது.

vi) Request for change/ correction in any particulars in the application form shall not be entertained under any circumstances. DRB, Pudukkottai will not be responsible for any consequences arising out of furnishing of incorrect and in complete details in the application or omission to provide the required details in the application form.

விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை மாற்ற வேண்டி பெறப்படும் எந்தவொரு கோரிக்கையும் பரிசீலிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தில் தரும் தவறான, முழுமையற்ற விவரங்கள் அல்லது விடுபட்டுப்போன விவரங்களுக்கு புதுக்கோட்டை மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் பொறுப்பாகாது.

vii) DRB, Pudukkottai is not responsible for online payment interruption or failure.

இணையவழி கட்டணம் செலுத்தும் முறையில் ஏற்படும் இடர்பாடுகளுக்கும்,
தோல்விகளுக்கும் புதுக்கோட்டை மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் பொறுப்பாகாது.

viii) Any clarification may be obtained from the Help Desk No. **04322-236089** you can also send in your queries at **pdktdrb2019@gmail.com**

கூடுதல் விவரங்கள் அல்லது சந்தேகங்களுக்கு **04322-236089** –ல் உள்ள உதவி மையத்தையோ அல்லது **pdktdrb2019@gmail.com** மின்னஞ்சல் முகவரியையோ தொடர்பு கொள்ளலாம்.

**District Recruitment Bureau for Cooperatives,**
**Pudukkottai.**